உ

ஓம் குஹாயநம:

திருப்புகழமிர்தம்

"குருப்புகழை மேவுகின்ற கொற்றவன் றுள்போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம்"

மலர் 18	விஜய ஆண்டு வைகாசித் திங்கள் மே-1953	இதழ் 2

திருப்புகழ்

பொது

நீலங்கொள் மேகத்தின் மயில்மீதே-
நீவந்த வாழ்வைக்கண் டதனாலே;
மால்கொண்ட பேதைக்குன் மணநாறும்-
மார்தங்கு தாரைத்தந் தருள்வாயே;
வேல்கொண்டு வேலைப்பண் டெறிவோனே-
வீரங்கொள் சூரர்க்குங் குலகாலா;
நாலந்த வேதத்தின் பொருளோனே-
நானென்று மார்தட்டும் பெருமாளே.

பதவுரை

வேல்கொண்டு – வேலாயுதத்தைத் திருக்கரத்தில் பற்றி, வேலை பண்டு எறிவோனே – கடல் வற்றும்படி முன்னாள் விடுத்தவரே! வீரங்கொள் சூரர்க்கும் குலகாலா – வீரம்படைத்த சூராதியவுணர்களை அவர்கள் குலத்தோடன் அழிக்க வந்தவரே! நால் அந்த வேதத்தின் பொருளோனே நான் என்று – நான்கு அழகிய வேதத்தின் உட்பொருளாக விளங்குபவனே நான் என்று கூறி, மார்தட்டும் பெருமாளே – திருமார்பைத் தட்டுகின்ற பெருமையின் மிக்கவரே! நீலம் கொள் மேகத்தின் மயில் மீது – நீல நிறமுடைய மேகம் போன்ற மயிற்பறவையின் மீது, நீ வந்த வாழ்வைக் கண்டு–தேவரீர் எழுந்தருளி வந்த பெருவாழ்வைத் தெரிசித்து, அதனாலே மால்கொண்ட பேதைக்கு - அக்காட்சியின் பயனாக உமது எழிலில் மயக்கங்கொண்ட அறிவில்லாத

பெண்ணாகிய எனக்கு; உன் மணநாறும் மார் தங்கு தாரைத் தந்து அருள்வாயே - தேவரீருடைய திருமார்பிலே விளங்குகின்ற மணம் நிறைந்த மலர்மாலையைத் தந்து அருள்புரிவீர்.

பொழிப்புரை

வேற்படையை எடுத்து கடலின் மீது முன்னாள் விடுத்தருளியவரே! வீரம் மிகுந்த சூரபன்மனாதி யவுணர்களது குலத்தை யழித்தவரே! "அழகிய நான்கு வேதங்களின் உட்பொருள் நானே" என்று திருமார்பைத் தட்டுகின்ற பெருமிதம் உடையவரே! நீல நிறமுடைய மேகம் போன்ற மயிலின் மீது தேவரீர் எழுந்தருளிவந்த அழகிய கோலத்தைக் கண்டவுடன் உமது மீது மயக்கங்கொண்ட பேதைப் பெண்ணாகிய எனக்கு உமது மார்பில் விளங்குகின்ற மணம் நிறைந்த மலர் மாலையைத் தந்து திருவருள் புரிவீர்.

விரிவுரை

நீலங்கோள் மேகத்தின் மயில்:—

மேகத்திற்கு இயல்பாகவுள்ள நிறம் வெண்மை; கடல் நீரைப் பருகிய பின்னர் அது நீல நிறத்தை யடைகின்றது. சூல் கொண்ட நீலமேகமே மழை பொழிந்து உலகிற்கு உதவுகின்றது. அதுவும் கைம்மாறு கருதாது பொழிகின்றது. "மழையின்றி மாநிலத்தார்க்கு இல்லை". பிறர் இன்பத்தைக் கண்டு தம்முடைய இன்பமாக எண்ணி இன்புறுகின்றவர்களே தலைசிறந்தவர்கள்; பொதுநலப் பிரியர்கள். ஆகவே மழை பொழிந்து மன்னுயிர்க்கு நலஞ்செய்ய வந்த கருமுகிலைக் கண்டு களிநடம் புரிவது மயில். எண்பத்து நான்கு நூறாயிர பேதங்களில் மழைமுகிலைக் கண்டு மகிழ்வது மயில் ஒன்றே.

பிறருக்கு எய்தும் இன்பத்தைக் கண்டு புழுக்கங்கொள்ளுதலும், பிறருக்கு எய்தும் துன்பத்தைக் கண்டு "அந்தப் பயலுக்கு இதுவேண்டும், இன்னும் வேண்டும். மேலும் வரட்டும். படட்டும்" என்று கூறி மகிழ்ச்சியுறுதலும் யாண்டும் பலரிடத்துங் காண்கின்றோம்.

> தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
> காமுறுவர் கற்றறிந் தார்.

என்ற திருவள்ளுவர் திருவாக்குக்கு இலக்கியமாக நின்று, பிறர்கட்கு உண்டாகும் இன்பம் தமக்கு வந்த இன்பமாக எண்ணி மகிழ்கின்றவரே பெரியோராவார்.

தனக்கென்று உள்ளங் கையளவு நிலங்கூட இல்லாத வள்ளலார் "வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்" என்கின்றார். ஏன்? அப்பயிருக்குடையவன் பட்டினியால் பர

தவிப்பானே என்று இவர் பாதவிக்கின்றார். "பிறர் துயர் என் துயர்" என்கின்றான் பீமன். ஆகவே அடுத்தவர்களுடைய துன்பத்தைத் தன் துன்பமாக எண்ணி நம்மால் முடிந்த அளவு முயன்று அவர்கள் துன்பத்தை யகற்றவேண்டும்.

துன்ப நீக்கமும் இன்ப ஆக்கமும் மழையினால் உண்டாகும். மழையே மாநிலத்தின் உயிர்நாடி. பயிர் தழைக்க உயிர் தழைக்கும். அத்தகைய மழை பொழிய வானில் இருண்ட மேகம் எழுந்தவுடனே உலகிற்கு உண்டாகும் நலனைக் கருதி அந்நலம் தனக்கு எய்தியது போல் உவந்து, தோகையை விரித்து களிநடம்புரிகின்றது மயில். இத்தகைய பண்பு வேறு எந்த விலங்குகட்கும் பறவைகட்கும் இல்லை.

இத்தகைய சிறந்த பண்புடைய மயிலை கருணை நாயகராகிய கந்தப்பெருமான் தமக்கு வாகனமாகக் கொண்டு அடியார்கட்கு அருளும் பொருட்டு வருவார்.

மயில்மீதே நீ வந்த வாழ்வு:—

சிவந்த பவளமலை போன்ற குமாரக் கடவுள் நீல மணி போன்ற மயிலின் மீது எழுந்தருளி வருகின்றபோது அக்காட்சி மாட்சிமிக்கதாக விளங்கும். அதனால் ஆருயிர்கட்கு எல்லா நலன்களும் உண்டாகும். வாழ்வைத் தரவருவதனால் "நீ வந்த வாழ்வு" என்கின்றார். ஆங்காரம் நீங்கினார்க்கு ஓங்கார மயிலில் முருகன் காட்சிதருவான்.

அருணகிரிநாதருக்கு அறுமுகப் பெருமான் மயில்மிசை வந்து அற்புதக்காட்சியை யருளினார்.

"சயிலமெறிந்தகை வேற்கொடு மயில்மிசை வந்தெனை யாட்கொளல்
சகமறியும்படி காட்டிய முருகோனே" —திருப்புகழ்.

வாழ்வைக் கண்டதனாலே மால் கொண்டபேதை:—

இப்பாடல் நாயகி நாயக பாவத்தில் அமைந்தது. முருகவேள் அழகிய மயில்வாகனத்தின் மீது கோடி சந்திரப்பிரகாசமாக எழுந்தருளிவந்த அற்புதக் காட்சியைக் கண்ட தலைவி அப்பரமநாயகன் மீது காமுற்று மயங்குகின்றாள். தன் உள்ளத்தைக் கொள்ளைகொண்ட முருகனை நினைந்து நினைந்து உருகுகின்றாள். அவன் மீது பித்தாகி நிற்கின்றாள். அவளுக்கு ஊணும் உறக்கமும் தவிர்கின்றன. உலகமெல்லாம் உறங்குகின்றன. ஆனால் அவளுக்கு விழிகள் மூடவில்லை.

"விண்ணுறங்கும் மண்ணுறங்கும் வேறுள எல்லாமுறங்கும்
கண்ணுறங்கேன் எம்மிறைவர் காதலால் பைங்கிளியே"

—தாயுமானார்.

உடம்பிலே பசலை யுண்டாகின்றது. உடல் மெலிகின்றது. அதனால் சங்குவளையல்கள் கழன்று விடுகின்றன. பறவைகளைக் கண்டு தன் குறைகளைக் கூறி விம்முகின்றாள்.

"பைங்கோட்டு மலர்ப்புன்னைப் பறவைகாள் பயப்பூரச்
சங்காட்டந் தவிர்த்தென்னைத் தவிராநோய் தந்தானே"
—திருஞானசம்பந்தர்.

மயங்குகின்றாள்; தியங்குகின்றாள். அதனால் அவள் அப்போது பேதை யென்று பேர் பெறுகின்றாள். அவள் உள்ளம் வெய்யிலைக் கண்ட வெண்ணெய் போல் உருகுகின்றது. காதலால் உள்ளங் கசிந்து கண்ணீர் பெருகுகின்றது. கருவி கரணங்கள் ஓய்ந்துவிடுகின்றன. பிச்சியாகி நிற்கின்றாள். அந்தப் பிச்சுக்கு மருந்து மருத்துவர்களிடம் கிடையாது. விடாய்கொண்டான் தண்ணீரை நாடுவதைப் போல் தான் காதலித்த தலைவனுடைய கருணையை நாடுகின்றாள். அவள் விடாய்சிறிது தணியும் பொருட்டு, அவள் காதலித்த தலைவனுடைய நாமத்தை ஒருவர் கூறினார். இன்னும் ஒருவர் அவருடைய நிறம் குணம் இவைகளைக் கூறுகின்றார். ஒருவர் அவர் வசிக்கும் அருமையான ஊரைக் கூறுகின்றார். இத்தனையுங் கேட்ட அவளுக்கு நெருப்பில் நெய்விட்டது போல் மேலும் மேலும் ஆராத காதல் அதிகரிக்கின்றது. அப்பதியையே நினைந்து பிச்சியாகின்றாள். தன்னைப் பெற்ற தாயையும் தந்தையையும் அன்றே நீத்தாள். தன்னையே மறந்து விடுகின்றாள். அங்கே அவள் பேருங் கெட்டுவிட்டது. இது அருட் காதல். இதன் பெருமை அளவிடற்கரியது. இதனை அப்பரடிகள் கூறுகின்றார்.

முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி யவனிருக்கும் வண்ணங் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தைத்
தன்னை மறந்தாள் தன் நாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே.

மார்தங்கு தாரைத் தந்தருள்வாயே:—

இவ்வாறு இறைவனிடங் காதல் கொண்ட ஆன்மாவுக்கு அக் காதல் நோயைத் தணிக்கும் மருந்து, இறைவனுடைய திருமார்பிலே யுள்ள மாலைதான். மாலைப்போக்கும் மாலையை அருணகிரிநாதர் இங்கே வேண்டுகின்றார்.

"குளிர்மாலை யின்கண் அணிமாலை தந்து
குறை தீரவந்து குறுகாயோ"

என்று செந்தில் திருப்புகழிலும் பாடுகின்றார்.

இறைவனுடைய திருத் தோள்களைத் தழுவவேண்டும் என்று வாடுகின்ற ஆன்மாவுக்கு அத்திருத்தோள்களில் தங்கியுள்ள மாலை மிகுந்த இன்பத்தைத் தரும்.

வேல்கொண்டு வேலைப்பண் டேறிவோனே:—

இறுதிநாளில் உறுதியுடன் சூரபன்மன் கடலில்போய் ஒளிந்தான். நூருயிரங்கோடி யண்டங்களின் கனலும் ஒருங்கே திரண்டது போன்ற உத்தண்டவேல் அக்கடலின் அருகிற் சென்றதும் அக்கடல் நீர் வற்றி வறண்டுவிட்டது.

சூரபன்மன்–ஆணவமலம். கடல்–பிறவித்துன்பம். வேல்–ஞானம். ஆணவமலமாகிய சூரன் பிறவிப் பெருங்கடலில் ஒளிந்தபோது ஞானமாகிய வேல் சென்றவுடனே அப்பிறவிப் பெருங்கடல் வற்றிவிட்டது என்று உணர்க.

"வேலைவற்றி வறண்டு சுறில் சுறிலென" — திருப்புகழ்.

வீரங்கொள் சூரர்க்குங் குலகாலா: —

சூரபன்மன் சிங்கமுகன் தாரகன் என்ற மூன்று அவுணர்களும் மிகுந்த வீரம் படைத்தவர்கள். தேவரையும் மூவரையும் வென்றவர்கள். 1008 அண்டங்களையும் 108 யுகங்களாக ஆண்டவர்கள். அவர்கட்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லை.

சூரர்க்கும் என்ற சொல்லில் வரும் உம்மை சிறப்பும்மை. அத்துணைச் சிறந்தவர்கள் சூரபன்மனுதியர். அவர்களிடம் அமரர்கள் அளைவரும். பணிவிடை புரிந்தார்கள். குமாரக் கடவுள் தனிவேல் தாங்கிச் சூரன் குலங்களையெல்லாம் அழித்து அருள்புரிந்தனர்.

சூரபன்மன் ஆணவமலம் என்று முன்னே குறிப்பிட்டனம். இனி அவனுடைய குலம் என்பது ஆணவமலத்திற்கு அனுகூலமாக நிற்கும் அவா, கோபம், மயக்கம், அழுக்காறு, கொலை புலை முதலிய துர்க்குணங்களாகும்.

நாலந்த வேதத்தின் பொருளோனே நான் என்று மார்தட்டும் பெருமாளே:—

"அழகிய நான்கு வேதங்களின் உட்பொருளாக இருப்பவன் நானே" என்று முருகவேள் மார்தட்டிக் கூறுகின்றார். ஏன்? உலகம் உணர்ந்து உய்யும்பொருட்டு.

வேதம் இறைவன் திருவாக்கு. "தாமறைபாடும் வாயார்" (பெரியபுராணம்). அவ்வேதம் பொதுவானது. முருகவேள் ஆறு சமயங்கட்கும் பொதுவானவர். "அறுசமய சாத்திரப் பொருளோனே". ஆகவே மறைகள் கூறும் உட்பொருள் அவரேயாவார். "மறையாயிரங்களும் குமரகுருவென வலிய சேடனஞ்ச வந்திடுவோனே" என்ற திருப்புகழாலும் இதனை யறிக.

இதனால் வேதகாரணர் முருகப் பெருமானே என்பதும் ஞான வீரரும், ஆணவத்தினையடக்கி பிறவிப் பெருங் கடலைக் கடத்துபவரும் அக்கருணாகரரே என்பதும் விளங்கும். ஆகவே அன்பர்கள் அனைவரும் முருகனே முழுமுதற் கடவுளென உணர்ந்து, அப்பரமபதியை நேசித்தும், அவருடைய திருவடியைப் பூசித்தும், அவருடைய திருப்புகழை வாசித்தும் இருமையும் ஒருமையில் பெறுவார்களாக.

கருத்துரை

வேலை வற்ற வேல் விட்டவரே! சூர குலாந்தகரே! வேதங்களின் உட்பொருளாகிய வித்தகரே! உம்மீது காதல் கொண்டிருக்கின்ற தலைவியாகிய எனக்கு உமது திருமார்பில் விளங்கும் மலர் மாலையைத் தந்து ஆட்கொள்வீர்!

ஸௌராஷ்ட்ர நீதி சம்பு

81. கடன் பாரத்தைக் கொடுத்த பிதா, அபகீர்த்தியை உண்டாக்கிய மாதா, இவர்கள் புத்திரனுக்குச் சத்ரு ஆகின்றனர். ஒழுக்கம் தவறிய பத்தினி புருஷனுக்குச் சத்ரு. கல்வி அறிவிலாப் புத்திரன் பிதாவுக்குச் சத்ரு.

82. ஓ ராஜனே! நன் நடத்தையுடைய ஒரே ஒரு புத்திரன் இருந்தால் போதுமானது. தீய நடத்தையுடைய நூறு புத்திரர்களை விரும்பாதே. சந்திரன் இன்றி நூறு நக்ஷத்திரங்கள் இருந்தும் பயன் என்ன?

83. பெண்ணை பால்யத்தில் தந்தை பராமரிக்கின்றான். அவளை யௌவனத்தில் புருஷன் பராமரிக்கின்றான். முதுமையில் மகன் போஷிக்கின்றான். எனவே ஸ்திரீக்கு எப்பருவத்திலும் சுதந்திரமில்லை என்றே சொல்லவேண்டும்.

84. ஆறுமுறை உலகப் பிரதக்ஷிணம் செய்தல், நூறுமுறை காசியாத்திரை செய்தல், நூறுமுறை ராமேஸ்வரம் சேது தீர்த்தமாடல் இவைகளினால் வரும் பலாபலன்கள் தன் தாய்க்குத் தொண்டு புரிவதால் ஒரு நொடியில் கிட்டும்.

85. ஐந்து வயதுவரை உன் மகனை ராஜாமாதிரி வளர்க்கவும். பின்பு ஆறுமுதல் பதினைந்துவரை மாணாக்கன் மாதிரி வளர்க்க. பதினாறுக்குப்பின் மித்திரன் மாதிரி வளர்க்க.

86. பிறன் மனைவியைத் தாயாகவும் பிறன் பணத்தை மண் பிண்டமாகவும், மன்னுயிரைத் தன்னுயிராகவும் எவன் கருதுகின்றானோ அவனே புத்திமான்.

உ

திருச்சிற்றம்பலம்

பெரிய புராணம்

சிறுத்தொண்ட நாயனார் புராணம்

(௧௨-ம் பக்கத் தொடர்ச்சி)

சிறுத்தொண்ட நாயனார் மகனைப் பெற்ற பெரும்பேறு முழுவதும் பெற்றதைப் போல் பெரிதும் மகிழ்ந்தார். இனிய மழலைமொழியுடன் கூடிய திருமகன் கல்வி பயில்வதற்காகச் சென்ற பள்ளிக்குச் சென்றார். பள்ளியிலே தந்தையாரைக் கண்டவுடன் பாதச்சதங்கை மணியொலிப்பப் பிள்ளை ஓடி வந்து தந்தையாரைத் தழுவிக்கொண்டது. அருமையான திருப்புதல்வரை எடுத்து அன்புடன் அணைத்துத் தோளின் மீது வைத்துக்கொண்டு இல்லத்தை யடைந்தார். திருவெண்காட்டம்மையார்எதிர்சென்றுமாணிக்க மணிவிளக்குப்போன்ற திருமகனாரை வாங்கி, தலை மயிரைத் திருத்தி, முதுகு தடவி, உள்ளம் உவந்து வாசநீரால் திருமஞ்சன மாட்டிக் குறைவற ஆடை அணிகலன்களால் அழகுபடுத்திக் கணவன் கரத்தில் எடுத்துக்கொடுத்தார்.

நாயனார் குற்றமில்லாத நற்றவருக்கு அமுது செய்ய உரிய உடம்பு என்று மகனை உச்சி மோந்தாரில்லை; முத்தமிடவில்லை. மார்பில் அணைத்துக் கொண்டு, தமது திருமாளிகையில் உலகர் அறியாவண்ணம் ஒருபுறத்தில் கொண்டுபோனார். திருவெண்காட்டு நங்கையார் பாத்திரங்களை நன்கு கழுவிவைத்தார். உலகை வென்ற தந்தையார் மகனது தலையைப் பிடித்தார். தாயார் இனிய மழலைக் கிண்கிணியுடைய பாதங்கள் இரண்டையும் மடியில் இடுக்கிக்கொண்டு கரங்கள் இரண்டையும் கையில் பற்றிக்கொண்டார். "சிவனடியாருக்குத் தன்னை நிவேதிக்கும் பொருட்டு இச்செயல் நிகழ்கின்றது என்பதை யறிந்த சீராள தேவர் "நாய்க்கும் பேய்க்கும் இரையாகும் இந்த ஊன உடம்பு அடியார் அமுதுசெய்யப் பயன்பட்டதே" என்று எண்ணி மகிழ்ச்சியுற்றார். மகன் மகிழ்கின்றான் என்பதை யறிந்த தந்தையார் வாள்கொண்டு ஒப்பற்ற மகனது தலையையரிந்தார். புத்திரன் என்ற சொல்லின் பயனை இவன் நமக்கு அளித்தான் என்று நாயனார் மகிழ்ந்தார். "அடியார் அமுதுசெய்யும் தொண்டுக்குத் தடை நேர்ந்தால் கணவனார் மாள்வார். ஆகவே அவ்வாறு அவர் மாளாது உய்ய நாயகன் உயிரை எனக்கு இவன் தந்தான்" என்று தாயார் மகிழ்ந்தார். இவ்வாறு இருவர்களும் அகமும் முகமும் மலர்ந்து செயற்கு அரிய அச்செயலைச் செய்தார்கள். தலையின் இறைச்சி அமுதுக்கு ஆகாது என்று கருதி சிறுத்தொண்டர் தமது வேலைக்காரியாகிய சந்தன நங்கையின் கரத்தில் தந்து புதைக்குமாறு கட்டளையிட்டார். ஏனைய உறுப்புக்களைச் சமைக்கத்தகுந்த

பக்குவமாகக் கூறுசெய்து மனைவியாரிடம் தந்தார். திருவெண் காட்டம்மை அவைகளை அடுப்பில் ஏற்றி அதனை நன்கு சமைத்துத் தாளிதமும் செய்து, அன்னமும் அமைத்து, "எல்லாம் தயாராகிவிட்டது; நீர் சென்று அடியாரை அழைத்து வாருங்கள்" என்று கணவனரிடம் கூறினர்.

வயிரவர் உரைத்தபடியே எல்லாம் அமைத்து முடித்ததை எண்ணி அளவற்ற மகிழ்ச்சியடைய நாயனர் விரைந்து திருக்கோயிலில் வண்டுகள் இருந்து ஒலிக்கும் திருஆத்திமரத்தின் கீழ் அமர்ந்திருக்கும் புனிதர் திருமுன் சென்ருர். வயிரவருடைய மலரடியை வணங்கி நின்று கூறுவார். "கருணை நிறைந்த பெருமுனிவரே! அடியேனுடைய இல்லத்திற்கு உணவு செய்ய எழுந்தருளும். எல்லாம் ஆயத்தமாக இருக்கின்றது; சிறிது காலந் தாமதித்தது. தேவரீர் பசித்திருக்க வைத்த குற்றத்தை மன்னித்தருளவேண்டும். இனி ஒருகண நேரமுந் தாமதிக்காமல் வந்து அமுது செய்யும்" என்ருர். கண்டத்தில் உள்ள கறையையும், நெற்றியிலே யுள்ள கண்ணையுங் காட்டாது மறைத்துவந்த வயிரவர் "நல்லது வாரும்" என்று எழுந்து நடக்கலுற்ருர். வறுமையாளன் சங்கநிதி பதுமநிதி என்ற இருநிதிகளை ஒருங்கே பெற்றது போல் சிறுத்தொண்டர் மனமகிழ்ந்து வயிரவரை அழைத்துக்கொண்டு மனைபுகுந்தார்.

வீடு முழுவதும் மாலைகள் தொங்கவைத்து, தூபதீபங்கள் அமைத்து, நிறைகுடம் வைத்து எதிர்பார்த்திருந்த அம்மையார் எதிர்வந்து அரனடியார் அடிமலரை வணங்கி ஆசனத்தில் இருத்தினர். மனைவியார் நன்னீர் கரத்தில் எடுத்து வார்க்க நாதனடியார் பாதமலரை நாயனர் விளக்கினர். பாதபூஜை செய்த நீரைத் தன் சென்னிமீதும் மனைவியார் சிரமீதும் வீடு முழுவதும் தெளித்தார். திருவடிகட்குச் சந்தனமும் மலர்களும் சாத்தி தூபதீபங்காட்டி வழிபட்டார். "இனி அமுது படைக்கலாமோ?" என்று வினவினர். அன்னமும் கறிகளும் ஒன்ருகப் படைக்குமாறு அவர் பணித்தருளினர்.

இலையிட்டு அன்னமும் கறிகளும் படைத்தார்கள். அவற்றையெல்லாம் பார்த்தருளிய பயிரவர், "நாம் சொன்னபடியே நரப்பசுவைக் கொண்டு எல்லாம் அமைத்தீரோ?" என்று கேட்டருளினர். திருவெண்காட்டம்மையார், "தயாநிதியே! தலையிறைச்சி அமுதுக்கு ஆகாது என்று அகற்றினேம். மற்றவையாவும்கறியமுது அமைத்துள்ளனம்" என்ருர். அடியார், "அதுவுங்கூட நாம் உண்போம். ஆகவே அதனையும் படையுங்கள்" என்றருளினர். அதைக் கேட்ட சிறுத்தொண்டர் நடு நடுங்கினர். சிந்தைநொந்தார். "அந்தோ! கெட்டேன். இத்தனை செய்தும் இப்பயிரவர் அமுது செய்யத் தடை நேர்ந்ததே. சிவபெருமானே! இனி என் செய்வேன்? தலையிறைச்சியையும்

இவர் உண்பார் என்பதை யறியாது அயர்ந்தேன்'' என்று பலப்பல நினைந்து வருந்தினார். "ஆ! ஆ! இனி செயத்தக்கது யாது?'' என்று திருவெண்காட்டு நங்கையும் திகைத்தார்.

அந்த வேளையில் அமுத சஞ்சீவி வந்து உதவியதுபோல் சந்தனநங்கை என்ற தாதியார் "தாங்கள் வருந்தவேண்டா. தாங்கள் தலையைப் புதைக்குமாறு தந்தபோது, ஒருக்கால் வயிரவப் பெருமானார் தலையிறைச்சியும் கேட்கக்கூடுமோ? என்று நான் எண்ணி தனியே அதனைச் சமைத்து வைத்திருக்கின்றேன். இதோ இருக்கின்றது'' என்றுகூறி அதனைக் கொணர்ந்து கொடுத்தார். பெரிய சுமை நீங்கியதுபோல் களிப்புற்ற நாயனாரும் அம்மையாரும் அதனை வாங்கிவந்து வயிரவர் முன் பரிகலத்தில் படைத்தார்கள். "பெருமானே! தாங்கள் பணித்தருளியபடி இதோ தலைக்கறியும் படைத்துளது. அமுது செய்தருளும்'' என்றார்.

வயிரவர், "அன்பரே! நாம் தனித்து உண்ணமாட்டோம். உடன் இருந்து உண்ண ஒரு அடியாரை அழைத்துவாரும்'' என்று பணித்தருளினார். அதைக்கேட்ட நாயனார் இடியேறுண்ட நாகம்போல் நடுங்கினார். "ஆ! கெட்டேன். அமுது செய்ய இதுவோ தடை? இவரைத் தேடிக் கண்டுபிடிக்க இத்தனைப் பாடுபட்டேனே? ஊர் முழுவதும் தேடியும் ஒருவரையுங் காணாது கவன்றேன். எண்ணிலாத அடியார்கள் வருகின்ற இவ்விடத்திற்கு சோதனையாக இன்று ஒருவரேனும் வரவில்லை. இனி நான் வேறு ஒருவரை எங்குபோய் கொணர்வேன்; ஈசனே! சிவகாமிநேசனே! பாவநாசனே!'' என்று சிந்தனை செய்து, வீட்டைவிட்டு போய் சுற்றுமுற்றும் பார்த்தார். திருவருளின் செயலால் ஒருவருங் கிடைக்கவில்லை. சிந்தை நொந்து உள்ளே வந்து, வாடிய முகத்துடன் வயிரவரை வணங்கினார். "எந்தையே! எங்கும் சிவனடியாரைக் காணப்பெற்றேனில்லை. அடியவர்களைக் கண்டு அடியேனும் திருநீறுபூசிக் கொண்டிருக்கின்றேன்'' என்றார்.

வயிரவர், "ஓ! நல்லது. நல்லது. உம்மைப்போலே திருநீறு இட்டார் எவருளர்? அருகில் அமர்ந்து நீர் எம்முடன் உண்ணும்'' என்று அருளிச் செய்து, அம்மா! அருகில் ஒரு இலை போடும். இந்த அன்னத்தில் பாதியும் இந்த இறைச்சிகளில் ஒரு கூறும் எடுத்து அந்த இலையில் படையும்'' என்று திருவெண்காட்டம்மையை நோக்கிப் பணித்தருளினார். அவர் அவ்வாறே படைத்தருளினார். வயிரவரை விரைவில் அமுது செய்விக்கும் பொருட்டு சிறுத்தொண்டர், இலையில் கையை வைத்து உண்ணப் புகுந்தார்.

உடனே வயிரவர் தடுத்தருளி, "நில்லும் நில்லும். நாம் ஆறுமாதங்கட்கு ஒருதடவை உணவு செய்வோம். நாம் இன்

னும் அருந்துதற்குத் தொடங்கவில்லை. நாடோறும் உணவு செய்யும் நீர், நாம் உண்ணுமுன் உண்ணத் தொடங்கியது முறையோ? நல்ல குழந்தையைப் பெற்றிருக்கலாமே? நம்முடன் இருந்து உணவுசெய்ய மைந்தனை அழையும்" என்றருளிச் செய்தார். முதலும் முடிவும் இல்லாத முதல்வரை நோக்கிச் சிறுத்தொண்டர், "எந்தையே! அவன் இப்போது உதவான்" என்றார்.

ஆறுதிங்கள் ஒழிந்துண்போம் உண்ணுமளவு தரியாது
சோறு நாளும் உண்பீர்முன் உண்பதென் நம்முடன் துய்ப்ப
மாறின் மகவு பெற்றீரேல் மைந்தன் றன்னை அழையுமென
ஈறும் முதலும் இல்லாதார்க் கிப்போ துதவான் அவன் என்றார்.

வயிரவர், "சிறுத்தொண்டரே! நாம் உமது புதல்வன் வந்தால்தான் உண்போம். இப்போது உதவான் என்று ஏன் கூறுகின்றீர்? அவன் எப்போதும் உதவுவான். நீர் சென்று நாடியழையும்" என்று அருள் செய்தார். வையம் புகழுஞ் சிறுத்தொண்டர் "இனி இவர் அமுதுசெய்ய நாம் என்ன செய்வோம்?" என்று சிந்தித்து, நறுமலர் சூடிய திருநிகர் மனைவியாருடன் வெளியே சென்று மைந்தனை அழைக்கின்றார்.

எந்தாய்! வருக இடர்தீர்க்க இங்கு வருக எமதுகுல
மைந்தா! வருக மாணிக்க மணியே! வருக மாதவத்தால்
வந்தாய்! வருக மறைஞான மதலாய்! வருக மதியனையாய்!
சிந்தா குலந்தீர் சீராள தேவா! வருக வருகவே.

"எங்கள் கண்ணே! சீராளதேவா! மாதவத்தால் வந்த மணிவிளக்கே! குணம் நிறைந்த குலக்கொழுந்தே! அடியார் அமுது செய்யும் பொருட்டு அன்புடன் அழைக்கின்றோம். வாராய் மகனே! வயிரவர் உன்னை அழைக்கின்றார். வாராய் மகனே! வந்து எங்கள் கவலை தீராய்" என்று என்புருக அன்புடன் ஓலமிட்டு அழைத்தார்கள்.

பரமேசுரன் திருவருளால் பள்ளியினின்றும் ஓடி வருவார் போல் சீராளதேவர் காலில் சதங்கை ஒலிக்க பொன்னுபரணங்கள் விளங்கத் தளர்நடையிட்டு ஓடி வந்தார். திருவெண்காட்டு நங்கையார் அந்த புத்திர மாணிக்கத்தை ஒப்பிலாத அன்புடன் எடுத்து அணைத்துத் தழுவிக் கணவனாரிடம் தந்தார். தந்தையார் சிந்தை மகிழ்ந்து வாங்கி, "இனி சிவபெருமானுடைய அடியார் உண்ணப் பெற்றோம்" என்று உவகை கொண்டார்.

திருமகனை எடுத்துக்கொண்டு அடியாரை அமுது செய்விக்கும் பொருட்டு உள்ளே சென்றார். பயிரவராக வந்த முதல்வர் மறைந்தருளினார். பயிரவரைக் காணாது சிறுத்தொண்டநாயனார் சிந்தை கலங்கினார்; அடியற்ற மரம் போலே கீழேவிழுந்தார். அவர் மனம் சுழன்றது. கண்கள் சுழன்றன.

இலையிலே இருந்த வெந்த இறைச்சிகளையும் கண்டாரில்லை. அஞ்சினர்.

செய்ய மேனிக் கருங்குஞ்சிச் செழுங்கஞ் சுகத்துப் பயிரவர்யாம்
உய்ய அமுது செய்யாதே ஒளித்த தெங்கே எனத்தேடி
மையல் கொண்டு புறத்தணைய மறைய அவர்தாம் மலைபயந்த
தையலோடும் சரவணத்துத் தனய ரோடுந் தாமணைவார்.

"சிவந்த திருமேனியும் கரிய தலைமயிரும் செய்ய சட்டையும் அணிந்த பயிரவர் நாம் உய்யும் பொருட்டு திருவமுது செய்யாது எங்கே ஒளிந்தார்?" என்று தேடி, மனம் மருண்டு திருமனையின் புறத்தே வந்து நோக்கினர். மறைந்த அப்பரம பதி மலைவளர் மங்கையுடனும் மயில்வாகனக் கடவுளுடனும் வெள்விடையின் கண் ஆரோகணித்து வானிடை காட்சியளித்தார். பூதகணங்கள், தேவர்கள், விஞ்சையர்கள், நாரதாதி முனிவர்கள் முதலியோர் புடைசூழ்ந்து போற்றி செய்தார்கள். இறைவனர் இனிய கறியும் அமுதும் படைத்த அடியார்க்கு திருவருள் நோக்கஞ் செய்தருளினர்.

அன்பின் வென்ற தொண்டரவர்க் கமைந்த மனைவியார் மைந்தர்
முன்பு தோன்றும் பெருவாழ்வை முழுதுங் கண்டு பரவசமாய்
என்பும் மனமும் கரைந்துருக விழுந்தார் எழுந்தார் ஏத்தினர்
பின்புபரமர் தகுதியினல் பெரியோ ரவருக் கருள்புரிவார்.

அன்பினல் பாசத்தை வென்ற சிறுத்தொண்டரும், அவருடைய மனைவியாரும் சீராளதேவரும் தமக்கு முன்னே தோன்றி சிவ மூர்த்தியை முழுதுங் கண்டு பரவசமுற்று உள்ளமும் உயிரும் என்பும் கரைந்து உருக மண்மிசை விழ்ந்தார். எழுந்தார். "எம்மையாள வந்த ஈசனே! பவநாசனே! அடியவர் நேசனே! என்னே உமது கருணை? எம்மையும் ஒரு பொருளாக எண்ணி, மூவருக்கும் தேவருக்கும் எட்டா முழுமுதற் கடவுளாகிய தேவரீர் எளிதில் எழுந்தருளிவந்தீரே! எங்கள் தவமே தவம். கற்பகோடி காலந் தவங்கிடந்தாலும் உம்மைக் காணமுடியாதே. எங்கள் கண் காணவந்த கண்ணுதற்கடவுளே!" என்று துதி செய்தார்கள்.

சிவபெருமான் திவடிக்கீழ் சிறுத் தொண்டரும், உமையம்மையார் திருவடிக்கீழ் திருவெண்காட்டு நங்கையும் சந்தன நங்கையும், வேல்முருகன் திருவடிக்கீழ் சீராளரும் இருந்து என்றும் பிரியாது இன்புற்றிருக்க அந் நால்வரும் உடன் வர அழைத்துக்கொண்டு சிவலோகத்திற்கு இறைவர் எழுந்தருளினர். மெய்ம்மையான அன்புடன் அடியவர்கட்கு அன்னமளித்த பயன் சிறுத்தொண்டர் அழியாத சிவபதம் அடைந்து பேரானந்தப் பெருவாழ்வில் என்றும் நின்று இன்புறுவாராயினர்.

(விளக்கம் அடுத்த இதழில்)

உ

முருகா

கிரிஜை

இனிமை தனிமையிலே விளைகின்றது. இனிது இனிது ஏகாந்தம் இனிது. அக்காட்டில் எங்குபார்த்தாலும் பூமரங்கள். பல நிறங்களையுடைய பூக்கள் உதிர்ந்திருந்தன. பழங்கள் பழுத்திருந்தன; கொடிகள் இப்படியும் அப்படியுமாகப் படர்ந்து பொலிவு செய்தன. வானளாவிய தேக்க மரங்கள்; நறுமணம் வீசும் சந்தன மரங்கள்; மருந்துக்கு உதவும் தருக்கள் நிறைந்திருந்தன. இரவிலே எரிகின்ற ஜோதி விருட்சங்கள். இருண்ட வனம். மதுகரங்கள் மலர்களை நாடி வள்ளலை நாடும் இரவலர்களைப்போல் பாடிக்கொண்டு திரிந்தன.

மான்களும் கடமைகளும் இரலைகளும் இரவு பகலாக இரை தேடிக்கொண்டு உலாவும். மலைச்சரிவுகளிலிருந்து சில சமயங்கள் மதயானைகளும் வந்து இரைதேடி மரங்களை ஒடித்துத் திரிந்தன. "கொய்" என்ற சத்தம் இன்னிசையரங்கில் இடையறாது தம் பூராசுருதி ஒலிப்பதுபோல் ஒலித்துக் கொண்டிருந்தது. இயல்பாகவே மயில்கள் ஆடவும், குயில்கள் பாடவும், அருவிகள் பேரிகை முழக்கவும் இசை விழா நிகழும். ஆனால் அதற்குக் கட்டணம் கிடையாது. வேர்ப்பலா மரத்தின் அடியில் பலாப்பழங்கள் பழுத்து அளிந்து வெடித்துத் தேன் சிந்தும். அதனை எடுத்துப் பிறி ஆண் குரங்குகள் பெண் குரங்குகளின் வாயில் அன்புடன் ஊட்டும். மூங்கில்கள் வானத்திற்கு வைத்த ஏணிகள்போல் உயர்ந்து காட்சிதரும். உயர்ந்த சில மூங்கில்களில் தீப்பிடிக்க, சில மூங்கில்களில் அத் தீப்பட்டு தொளைகள் உண்டாகும். காற்று வலிமையாக வீசும்போது அத் தொளைகளின் வழியே காற்று சென்று இனிய நாதங்களையுண்டாக்கும். இயற்கையான கானம். ஆ. ஆ. இயற்கையன்னை செய்யும் திருவிளையாடல்கள் தான் எத்தனை? அவற்றை அளவிடவல்லார் யாவர்?

இத்தகைய அத் தனிவனத்திலே ஒரு குன்றத்தின் சாரலிலே ஒரு குடிசை. அதற்கு வீட்டுவரி கிடையாது. இன்பமான புல்தரை. அக் குடிசையிலே மலையன் என்ற வேடன் வாழ்ந்து வந்தான். அவ்வேடன் வேட்டையாடுவதையும், தேன் எடுப்பதையும் முக்கியமான வேலைகளாகக் கொண்டிருந்தான். விரப்ரதாபமுள்ளவன். அகன்ற மார்பும் உயர்ந்த தோள்களும் உடையவன். மரப்பட்டையாலாகிய உடையையுடுத்திருப்பான்.

அவன் மனைவி கிரிஜை. அவள் வேட்டுவ குலத்தில் பிறந்திருந்தாலும் நல்ல அழகுடையவள். அவள் முகத்தில் எங்குமில்லாத ஒரு கலை கவிநடம் புரிந்துகொண்டிருந்தது. நீண்ட

கூந்தலை ஒருபுறமாக முடித்து காட்டுப் பூக்களைச் சூடியிருப்பாள். கணவனை இடையறாது அநுசரித்து வந்தாள். கணவனுக்கும் மனைவிக்கும் ஒருவருக்கு ஒருவர் உண்மையான ஒப்பற்றநேசம் இருந்தது. அத்தகைய அன்பு அரண்மனையில் முடிசூடிய மன்னனுக்கும் மன்னன் மனைவிக்குங்கூட இராது. அவர்கள் வாழ்வில் இருந்த அமைதி கோடீசுரன் வாழ்வில் ஏது? அக்காட்டில் அவர்கள் வாழ்வில் ஊற்றெடுக்கும் இன்பம் நாட்டில் நாகரீகமுள்ள குடும்பத்தில் தேடினாலும் கிடைக்காதே? நகையைப்பற்றியோ பட்டாடையைப்பற்றியோ அவர்களுக்குள் தகராறு வரக் காரணமேயில்லை. மனித வாழ்வில் வரும் துன்பங்கள் தேவைகளை மிகுதிப்படுத்துவதனால்வரும் தொல்லைகள் தானே. தேவையைக் குறைக்கக் குறைக்க நிம்மதியுண்டாகும்.

வேண்டாமை யன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை
யாண்டும் அஃதொப்ப தில்.

என்ற பொய்யாமொழி பொய்யா மொழியே யன்றோ? அது செய்யா மொழிக்கு நிகரானதாகுமே.

அம் மலைச்சாரலிலே வற்றாத ஒரு ஓடை; அதன் கரையில் சித்தத்தைச் சிவன்பால் வைத்து உத்தமமான நிலையில் ஒரு முனிவர் அமர்ந்திருந்தனர். அவருடைய விழியில் ஞான ஒளி வீசிக்கொண்டிருந்தது. தளர்ந்த மேனியும் வளர்ந்த சடைமுடியும் உடையவராக அவர் விளங்கினார். அவர் எல்லா வல்லமையும் பொருந்தியவர். புலி கரடி பாம்பு முதலிய கொடிய உயிர்களும் அவரிடம் வசமாகியிருந்தன. யானைகள் உலர்ந்த மரங்களைத் தும்பிக்கையால் ஒடித்துக்கொண்டுவந்து குளிர் விலகும் பொருட்டு நெகிடிபோடும். இரவில் நாகப்பாம்புகள் தத்தம் பணமகுடங்களை விரித்து நாகரத்னங்களால் விளக்கிட்டு ஒளியை யுண்டாக்கும். குரங்குகள் கனிகளைக் கொணர்ந்து குவிக்கும். இத்தகைய மகிமை நிறைந்த அம் மாதவ முனிந்திரர் கண் கூடாக மண்ணுலகத்திற்கு வந்த பிரமதேவரைப் போல் காட்சியளித்தார்.

மலையன் என்ற வேடனுடைய மனைவியாகிய கிரிஜை அம் முனிவரிடம் அடிக்கடி வந்து தொண்டு செய்வாள். அவள் மனம் அவரிடத்தில் அளவு கடந்த பக்தியுடன் ஈடுபட்டிருந்தது. அவருடைய குறிப்பறிந்து குற்றேவல் புரிவாள். அவளுடைய மாசற்ற மனத்தையும், தூய அன்பையுங்கண்டு முனிவர் பெருமான் அவளிடம் மிகுந்த கருணையுடையவராக இருந்தார். ஆவியீடேற்றத்திற்குரிய நன்மொழிகளைக் கூறுவார். பதிபக்தியின் பெருமையை விளக்குவார். இயல்பாக நற்குணம் படைத்த அவளுக்கு முனிவர் உபதேசம் மேலும் மேலும் நற்குணம் மெருகிட்டது போலாயிற்று. விலங்குகள் வசியமாகும் மந்திர

மும், சராசரங்களை அசையச் செய்யும் மந்திரங்களையும் முனிவரிடமிருந்து அவள் அறிந்துகொண்டாள்.

ஒருநாள் மாலை நேரம். மலையன் வேட்டையாட வெளியே சென்றிருந்தான். குடிசைக்கு வெளியே புல்லுகளைச் செதுக்கிக் கொண்டு கிரிஜை மஞ்சள் வெய்யிலில் மெருகிட்ட தங்கச்சிலை போல் நின்றாள். அம்மலைக்கு அப்பாலுள்ள நகரை யாளுகின்ற சிங்கண்ண மன்னன் வேட்டையாடிய வண்ணமாக அங்கு வந்து சேர்ந்தான். அவன் கிரிஜையைக் கண்டு தேனுண்ட வண்டு போல் மயங்கிநின்றான்.

“ஆ! என்ன அதிசயம்? இவள் என்ன திருமகளா? இரதி தேவியா? மேனகையா? வனத்தில் வாழும் மனத்திற்கிசைந்த வன தேவதையா? என்ன அழகு? அன்ன நடையும் மின்ன லிடையும் வாய்த்த இவள் யார் பெற்ற மாதவமணியோ? இன்று எனக்கு ஒரு நல்ல நாள்; பெரிய வாய்ப்பு; ஆ! ஆ! இவளைக் கண்ட கல்லுங் கரையுமே? என் மனங் கரைவதில் என்ன ஆச்சரியம்? இவளை யடைவதைக் காட்டிலும் பெரிய பாக்கியம் ஒன்று உளதோ? பல பிறப்புக்களில் செய்த புண்ணியங்கள் அத்தனையும் திரண்டு இப்பெண்ணுருவமாக வந்து காட்சியளிக்கின்றது போலும்”

இவ்வாறு அம் மன்னன் தன் மனதிற்குள் எண்ணி இறும்பூதுற்றான். அவள் அருகிற் சென்றான். கள்ளமில்லாத உள்ளம் படைத்த அக்கட்டழகி, அவனைக் கண்டு சற்று அச்சமும் நாணமுங் கொண்டு ஒதுங்கி நின்றாள்.

சிங்கண்ணன் அவளை நோக்கி, “மாதரசே! நீர் விடாயால் வருந்திவந்தேன். சற்று குடிப்பதற்குக் குளிர்ந்த நீர் கொடு” என்றுகேட்டான். கிரிஜை உள்ளே சென்று நான்கு ஐந்து பலாச்சுளைகளும் ஒரு மண் பாத்திரத்தில் இளநீர் போன்ற தண்ணீருங் கொணர்ந்து தந்தாள். அதனை யுண்ட அவன், “பெண்மணியே! நீ ஏன காட்டிலிருக்கின்றாய்? மாணிக்கமணி மண்ணில் புதைந்தது போல் இருக்கின்றது. இனி உனக்குக் கானக வாழ்க்கை வேண்டாம். என்னுடன் வா. அரண்மனையில் இந்திரபோகத்தை யனுபவிக்கலாம்”

“அண்ணா! வணக்கம். உமது இரக்கத்திற்கு நன்றி. ஆனால் என் கணவர் வெளியே சென்றிருக்கின்றார். நான் கற்பு நலத்தை மேற்கொண்டவள். கணவன் தான் கண்கண்ட தெய்வம். கணவனுடன் வாழும் வாழ்வே சுவர்க்கலோக வாழ்வு. கணவனைப் பிரிந்திருப்பதுவே மயான வாழ்வு ஆகும்”

“பெண்மானே! என்னை யறியாமல் பேசுகின்றாய். நான் நாட்டை யாளும் மன்னன்; வேட்டையாடவந்தேன். என்னுடன் வந்தால் உனக்கு எல்லா நலங்களும் உண்டாகும்.

வலிதில் வருகின்ற பெரிய சம்பத்தைத் தள்ளாதே. உன் கணவனையும் நான் கொல்லுவேன்''

"சீ சீ! மூடனே! உளராதே. நீயா மன்னன்? இல்லை இல்லை; மடையன். ஒருவன் மனைவியை இச்சிப்பதுவா அரச தாமம்? வேலி பயிரை மேய்வது முறையாகுமா? உன் தமையன் இராவணன் பிறன் மனைவியை நயந்து குலத்துடன் மாண்ட கதை உன் காதில் விழவில்லையா? மானுடப் பதரே! பதவி மோகத்திலே மதம் பிடித்த மதிகேடனே! இங்கே நில்லாதே. ஓடிப்போ. புலி பசித்தால் புல்லைத்தின்னுமா? என்னை என்ன என்று எண்ணினாய்? உன் தலையிலுள்ள மணிமகுடம் என் கணவனுடைய கால் தூசுக்கு இணையாகாது என்பதை கவனத்தில் வைத்துக்கொள். உனக்கு அழிந்துபோகக்கூடிய காலம் அருகில் வந்திருக்கின்றது. சீக்கிரம் போய்விடு''

"அன்புள்ள அன்னமே! உனக்கு இன்னும் எவ்வளவு வையவேண்டும் என்ற விருப்பமோ அவ்வளவும் வைதுக்கொள். ஆகா! கோபமுள்ள குரலே தேனைபோல் சுவைக்கின்றதே? உன்னை விட்டு நான் தனியே போகேன். என்னுடைய ஐம்பது மனைவியர்களும் உன்னை வணங்கும்படிச் செய்து பட்டமகிஷியாக வைப்பேன். நான் உன் அடிமை. என்னை நீ ஆட்கொள்ள வேண்டும். என் அரசு, ஆவி, ஆக்கை, வாழ்வு எல்லாம் உன்னுடையவே. உன் மனம் இரும்பா! கல்லா! என்பால் இரங்கு'' என்று கூறிக்கொண்டு அவளிடம் நெருங்கிக் கரங்களால் தீண்ட முயன்றான்.

கிரிஜை ஆலகாலம் போல் சீறினாள். அவள் முகத்தில் அனல் பொறி சிந்தியது. ஒரு மந்திரத்தை யுச்சரித்தாள். நான்கு ஐந்து நீண்ட நாகப்பாம்புகள் வந்து அவனை வளைத்துக் கொண்டன. பாம்பென்றால் படையும் நடுங்குமே. அப்பாதகன் பதைபதைத்து ஓடினான். நெடுந்தூரம் அப்பாம்புகள் துரத்திக்கொண்டு சென்றன. அவன் தன் நகரம் போய் அரண்மனையில் நுழைந்தான். பெருமூச்சுவிட்டான். நடுங்கினான். அன்று கனவிலேகூட அரவினங்கள் தன்னை விரட்டுவதாகக் கண்டு அலறினான்.

கிரிஜை மன்னனுடைய அடாத செயலையும், அவனால் அந்த நாட்டு மக்கள் என்ன துயரம் அடைவார்களோ என்றும் எண்ணி ஏங்கினாள். அவனுக்கு நல்லறிவு தோன்றவேண்டும் என்று இறைவனை வேண்டினாள். இவ் விஷயங்களைக் கணவன்பால் கூறினாளில்லை. கணவன் உள்ளம் கவலையுறவேண்டாம் என்பதுவே அதற்குக் காரணம். கணவன் வந்தவுடன் வழக்கம் போல் அவனை வணங்கி உணவுபடைத்து உபசரித்தாள்.

மலையன் மனைவியை நோக்கி, "கிரிஜா! உன் முகத்தில் ஏதோ மாறுபாடு தெரிகின்றதே, என்ன சேதி? மலர்

போன்ற உன் முகஞ் சிறிது வாட்டமாக இருக்கின்றது. என்ன நிகழ்ந்தது!" என்று அன்புடன் கேட்டான்.

கிரிஜை: "என் ஆருயிரே! உலகத்திலே வரவர நீதிநெறி தவறி வருகின்றது. நல்லொழுக்கம் குன்றுகின்றது. பிறர் பொருளைக் கூசாமல் விரும்புகின்றார்கள். பொய்யும் சூதும் வாதும் மனிதர்கள் உள்ளத்தில் தலைவிரித்து அசுரநடனம் புரிகின்றன. கலிபுருஷன் தனது கொடுமையை இப்போதே அதிகம்புரியத் தொடங்கி விட்டான். உலகில் நிகழும் அநீதிகளை நினைத்து வருந்தினேன். வேறு ஒன்றும் இல்லை. உணவை யுண்ணும்" என்றாள்.

மறுநாள் மாலையிலும் வேடன் இல்லாத சமயம் பார்த்து மெல்ல சிங்கண்ணன் வந்தான். கிரிஜை குடிசைக்கு முன்னுள்ள பூச்செடிகளுக்குத் தண்ணீர் விட்டுக்கொண்டிருந்தாள்.

"என் உள்ளத்தைக் கொண்ட தெள்ளமுதே! உன் பொய்யிடை நைய ஏன் இந்த கடினமான வேலை செய்கின்றாய்? உனக்கு இது தகாது. நான் உன்னைக் கோடிமுறை அன்புடன் வேண்டிக்கொள்ளுகின்றேன். என்மேல் கோபித்துக்கொள்ளாதே. உனக்குக் கணவனை விட்டுவர விருப்பமில்லையாயின் அவனையும் அழைத்துக்கொண்டுவா. அவனுக்கு என் சேனையில் ஏதாவது ஒரு உத்தியோகந் தருவேன். நீ சிறந்த போகபாக்கியங்களை யனுபவித்துக்கொண்டிரு. தேடிவரும் தெய்வாநுக்ரகத்தைத் தெருவில் எறியாதே"

"குணக்கேடனே! மூடனே! உன் உள்ளத்தில் சிறிதாவது நீதிநெறிக்கு இடமில்லையா? நீ ஒரு மனிதன்தானா? உன் மனைவியை ஒருவன் விரும்பினால் உன் உள்ளம் அதைப்பொறுக்குமா? அதை நீ சரியென்று ஏற்றுக்கொள்ளுவாயா? யோசித்துப்பார். இம் மானிட சரீரம் கோடி புண்ணியத்தினால் வருவது. இச் சரீரத்தைக்கொண்டுதான் இறைவன் திருவடி சார வேண்டும். உனக்கு நல்ல அமைச்சர்கள் இல்லையா? நற்குடியில் பிறக்காதவர்க்குத்தான் நல்லறிவு இருக்காது. வீணே கெட்டுப் போகாதே. இரும்பை எரும்பு விரும்பக்கூடாது"

"மாதரசே! உன் மணி வார்த்தையைக் கேட்டு என் மனம் மகிழ்கின்றது. இளமை வளமையுடன் கழியவேண்டும். இன்றிருப்பார் நாளை யில்லை. நல்ல போகபாக்கியங்களை யனுபவிக்க வேண்டும். நீ சொல்கின்றபடி யெல்லாம் நான் கீழ்ப்படிந்து நடப்பேன். ஆனால் நீ மட்டும் என் ஆவலைத் தணிக்கவேண்டும்" என்று கூறி அவளை நெருங்கினான்.

கிரிஜை ஒரு மந்திரத்தை உச்சரித்தாள். ஐந்து ஆறு சிங்கங்கள் வந்து அவனைச் சூழ்ந்து நின்று கர்ஜித்தன. சிங்கண்ணன் இந்த அதிசயத்தைக் கண்டு பெரு நடுக்குற்றான்.

அவன் உடம்பிலே வேர்வை வடிந்தது. செய்வது இன்னது என்று அறியாது திகைத்தான். "அம்மா! அம்மா! என்னைக் காப்பாற்று. உன்பாத மீது பணிகின்றேன். என்னைக் காப்பாற்று" என்று அலறினன்.

கிரிஜை, "மூடனே! இப்போதாவது உனக்கு நற்புத்தி வந்ததா? வந்த வழியே திரும்பிப்போ. இனியாவது ஒழுங்காக இரு. சிறிய அவாவுக்காக பெரிய பழிபாவத்தைத் தேடிக்கொள்ளாதே. எச்சரிக்கை. ஓடிப்போ" என்ருள். இடுக்கிக்குள் அகப்பட்ட எலிபோல் மெல்லத்திரும்பி ஊர்போய்ச்சேர்ந்தான். பாம்புகளும் சிங்கங்களும் திடீர் என்று எப்படி வந்தன? அவள் அவைகளை எப்படி வரவழைத்தாள்? என்று சிந்தித்து மந்தித்த புத்தியுடன் இருந்தான்.

மூன்ருவது நாள் இரத கஜ துரக பதாதிகளுடன் புறப்பட்டான். வேடனைக்கொன்று அவளை வலிதில் எடுத்துக்கொண்டு வரவேண்டும் என்று திட்டமிட்டான். மலையன் வாழும் மலையடிக்கு வந்தான். அன்று மலையன் தன் குடிசைக்கு முன் சுகமாக இருந்தான். சதுரங்க சைனியங்கள் வருவதைக் கண்டான். எங்கோ பகையரசர்கள் மீது படை எடுத்துப் போகின்றன போலும் என்று கருதினன்.

மலையனுக்கு அருகில் வந்து போர்ப்பறை யறைந்து சேனைகள் ஆயுதங்களை எடுத்துப் போருக்கு ஆயத்தமாக நின்றன. மன்னன் முன்னுக்கு வந்து, "வேடனே! உன் மனைவியைத் தருகின்ருயா? அல்லது உன் உயிரைத் தருகின்ருயா? இரண்டில் ஒன்றைச் சொல்" என்ருன் வேடர் கோமான் வெகுண்டு எழுந்தான். வில்லை வளைத்துக் கடும்போர் புரிந்தான். நாலா பக்கங்களிலும் சேனைகள் ஈட்டி, சூரிகை, வாள், தண்டு, இருப்புலக்கை, முசலம், அம்பு முதலிய ஆயுதங்களை எடுத்து எறிந்தன. இவன் ஒருவன் சக்கரம்போல் சுழன்று அத்தனை ஆயுதங்களையும் தடுத்துக்கொண்டு வீரத்துடன் போர் புரிந்தான். அவன் நெஞ்சில் அஞ்சுதல் இல்லை. வீரக்கனல் விறிட்டு எழுந்தது. அவனுடைய ஆற்றலைக் கண்டு சிங்கண்ணன் வியந்தான். நீண்டநேரம் போர் நிகழ்ந்தது. வரவர மலையனுடைய வலிமை குன்றியது. நூற்றுக் கணக்கான சேன வீரர்கள் நானுவிதமாகப் போர் செய்யும் போது இவன் ஒருவன் எத்தனைநேரம் எதிர்க்கமுடியும்?

அந்த சமயம் முனிவருடைய ஆசிரமத்துக்குச் சென்றிருந்த கிரிஜை வந்து சேர்ந்தாள். இங்கு நிகழும் கடும்போரைக் கண்டு கலங்கினுள். தன் கணவனுக்கு ஆபத்துவருமோ என்று ஏங்கினுள். தன் குருநாதரிடம் கற்றிருந்த மந்திரங்களில் ஒன்றை உச்சரித்தாள். அருகில் இருந்த உயர்ந்த குன்றுகள் உருண்டுவந்தன. அக் குன்றுகள் இப்படியும் அப்படியுமாக

உருண்டதலை அம்மியில் அகப்பட்ட மிளகாய் வத்தல்களைப் போல் அச்சேனைகள் அரைபட்டழிந்தன. அத்தருணத்தில் மலையனைச் சிங்கண்ணன் வடிவாளால் வெட்டி வீழ்த்தினான். முடிவில் குன்றின் கீழ் அவனும் அகப்பட்டு துகைபட்டொழிந்தான். இவைகள் முழுவதும் சில விநாடிக்குள் முடிந்தன.

கிரிஜை, தன் கணவன் எங்கே என்று நாடிப் பார்த்தாள். கணவன் மாண்டுகிடக்கக் கண்டாள். “ஆ! பிராணபதி! இதைக் காண என் கண்கள் என்ன பாவஞ் செய்தனவோ? அந்தோ! தங்கள் தலையில் அயன் இப்படியும் விதித்தானோ? என் இதயந் துடிக்கின்றதே. உமது திருமேனி உதிரச் சேற்றிலே கிடக்கின்றதே.

அமுதநிகர் கனிமொழியால் அன்னமே எனஅழைப்பாய்!
அந்தோ! அந்தோ!
குமுதபதி நிகர்தருமுன் கோலமதி முகமெங்கே? கோவே! யந்தோ!
சமுகநலமழிக்குமிறை யொருவனாலழிந்து சிவன்சரணஞ்சார்ந்தாய்!
சுமுகமுடை நினைக்காண வருகின்றேன் திருவருளைத்
துணைகொள்வேனே.

“பிராணேசா! உம்முடைய திருவடியையன்றி ஒருபற்றுமில்லாத நான் இவ்வுலகில் எவ்வாறுவாழ்வேன். மறம் வெல்லவும் அறம் தோற்கவும் கண்டேனே. இது என்ன அநியாயம். கற்புநெறியறியாத கசடனால் மாண்டீரே! அடியேன் இருந்தால் இந்தக் கதி வந்திராதே. அந்தோ! இனி என் செய்வேன்? இதோ! உமது பாதமலரைப் பணிய வருகின்றேன். வருகின்றேன்” என்று புலம்பினாள். கணவன் உடம்பின் மீது வீழ்ந்தாள். அவள் ஆவி உடம்பை விட்டு அகன்றது.

அன்று மாலை வழக்கம் போல் தனக்குப் பணிவிடை புரிய கிரிஜை வரவில்லையே! அதற்கு என்ன காரணமோ? என்று முனிவர் ஐயுற்றார். யோகதிருஷ்டியினால் நிகழ்ந்ததை யறிந்தார். கன்றையிழந்த காராம் பசுவைப்போல் ஓடிவந்தார். தன் மகள்போன்ற கிரிஜை கணவன் மீது வீழ்ந்து மடிந்திருப்பதை முகக்கண்ணால் கண்டு பெரிதும் வருந்தினார். தனது அளவற்ற தவசக்தியால் ஒருகணத்தில் மலையனையும் கிரிஜையையும் உயிர் பெற்று எழச் செய்தார். இருவரும் எழுந்து இருடியர் கோவை இறைஞ்சினார்கள். முனிவர் அவர்களை வாழ்த்தி யருளினார். மறுநாள் அந்த நகரத்திற்கு மலையனையே மன்னனாக முடிசூட்டி வைத்தார். மலையன் மன்னனாகி நெறி தவறாது செங்கோலோச்சி நாடுநகரங்களை யாண்டுவந்தான். கிரிஜை கற்பு நெறி பேணி கணவனுடன் வாழ்ந்து இன்புற்றாள்.

உ

முருகா

பெருந்துறவு பூண்ட பேரடிகளார்

(அன்பன் மு. பெருமாள், வேலூர்)

துறவு பூண்பது என்பது எளிதானதன்று. நானும் துறவியென நாட்டில் பலர் நரகாட்சியளிக்கலாம். அவர்கள் துறவிகளாகார். ஆடை மாறுதலிலும், முடிவளர்ப்பதிலும் மட்டும் துறவு அடங்கவில்லை. நமது பேராசிரியர் திருமுருக கிருபானந்தவாரியார் அவர்கள் பேசுவது போன்று ஆடையின் கலரை மாற்றுவதைவிட அகத்தின் இருளை மாற்ற வேண்டுவதுதான் உண்மைத் துறவாகும்.

“காவியுடுத்துந் தாழ்சடைவைத்துங் காடுகள் புக்குந் தடுமாறி” யென அறிஞர் பெருமான் அருணகிரிநாதர் அறிவுறுத்துவது போன்று, துறவின் தன்மை புறச்சின்னங்களின் மாறுதலில் மட்டும் பொருந்தியிருக்கவில்லை. அகத்துறவுதான் அவசியம் வேண்டும். அஃதாவது மனதில் எப்பற்றும் இல்லாமை வேண்டும். துறவு என்பது தொல்லுலகில் தோன்றிய மக்கள் யாவர்க்கும் இன்றியமையாதனவாக இருத்தல்வேண்டும். அங்ஙனமாயின் அனைவரும் சன்னியாசம் பூண்டு ஆரண்யம் அடைதல் வேண்டுமென்பதன்று. எவரது உள்ளத்தில் துறவு உண்டோ அங்கே இன்பம் உண்டு. எவரது உள்ளத்தில் துறவு இல்லையோ அங்கே இன்பம் இல்லை. மனத்துறவு இல்லாதவர் அமைதியான இன்பத்தின் எல்லையையும் எய்த முடியாது.

எனவே இன்பம் வேண்டுவோர் மனத்துறவு கொள்ளல் வேண்டும். மனத்துறவு என்றால் மாடு, மனை, மக்கள், சுற்றம், செல்வம் யாவையும் விட்டு வெளியேறாமலே, அவைகளினிடையே அழுந்திய பற்றுதல் கொள்ளாமல் வாழ்வதேயாகும். அஃதாவது புறமாகிய செல்வத்தின் கண்ணும், அகமாகிய உயிரின் கண்ணும் உள்ள அவாவை விட்டு வாழும் வகையறிந்த ஒருவர், இல்லறத்தில் இருந்தாலும் அவரைத் துறவி என்றே கூறுதல்வேண்டும். இவ்வுலகப் பற்றை விட்டு இறைவனிடம் பற்று கொண்ட உத்தமர்கள், இல்லறத்தில் வாழ்ந்தாலும் மெய்ஞ்ஞானிகளேயாவர் என்று, “காடே திரிந்தென்ன” என்ற பாடலில் பட்டினத்துப் பேரடிகளார் பகர்கின்றார்.

ஏனெனின் எல்லாப் பற்றினையும் ஒழிப்பவன் இறைவனாகும். எனவே அப்பெருமானைப் பற்றினால் எல்லாப் பற்றும் தானாகவே அழிந்துவிடும்.

பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.

எனப் பொய்யாமொழியும் அதற்குச் சான்று புகல்கின்றது. எனவே வாழ்க்கையையும், பிறவிப் பயனையும் இன்பக்களஞ்சியமாக்க அகத்துறவு அரிய துணை செய்கின்றது என்பதை உணர்தல் வேண்டும். நிலையில்லாதவைகள் அனைத்தையும் நிலையுள்ளனவாக நினைந்து நயக்கின்றோம். அவை நீடித்த இன்பம் நல்காதபோது அதை நினைத்து நினைத்து நம் மனம் வாடி வருந்துகின்றது. காரணம் பற்றுதான். நாம் நிலையில்லாத வாழ்க்கை உடையவர்கள் என்பதை மறந்துவிடுகின்றோம். அற நூல்கள் நினைவூட்டியும் மறந்துவிடுகின்றோம். அறிஞர்கள் விளக்கி அறிவுறுத்தியும் அப்போதைக் கப்போதே மறந்துவிடுகின்றோம். இளமை நிலையாமை, செல்வம் நிலையாமை, வாழ்க்கை நிலையாமை, என்பதை நாம் நித்திய வாழ்வில் கண்கூடாகக் கண்டும், கேட்டும் மறந்துவிடுகின்றோம். ஆக இம்மறதிக்கு மூலகாரணம் மனத்தில் வளரும் அவாவே தான். அவா ஆராத்துயரின் ஆணிவேராகும். நாமே நிலையில்லாதவர்களாக இருக்கையில், நம்மைச் சூழ்ந்துள்ளவர்களும், பொருள்களும் எங்ஙனம் நமக்கு நிலையான நன்மையும், இன்பமும் அளிக்க வியலும்? 'நில்லாதவற்றை நிலையின வென்றுணரும், புல்லறிவாண்மை கடை' என்ற செந்தமிழ் மறைமொழிப்படி நிலையில்லாதவைகள் மீது பற்று வைப்பது தவறாகும்.

ஆகவேதான் தமிழ்மறை வகுத்த பெருநாவலர் "துறவு" என்ற அதிகாரத்துக்கு முன் "நிலையாமை" என்ற அதிகாரத்தை வைத்து விளக்கிய பின், துறவு என்பது குறித்துப் பேசியுள்ளார். அத்துறவு என்ற நிலையில் மனம் சென்றால் மெய்யுணர்வு பெறலாம் என்பதற்கீடாக துறவுக்குப்பின் "மெய்யுணர்தல்" என்ற அதிகாரத்தை அமைத்துள்ளார் அறிவின் சிகரமான திருவள்ளுவப் பெருந்தகையார்.

பற்றற்ற துறவு பேரின்பம் பயக்கும் பெருமையுள்ளது. என ஓர்ந்து, பல பெரியோர்கள் நம் நாட்டில் அதைப் பின்பற்றினார்கள். அத்தகைய துறவிகளின் வரிசையில் முன் நிற்பவர் பெருந்துறவி பட்டினத்து அடிகளார்தான். எப்பாலாரும் வாழ்த்தும் கப்பல் வாணிபமும், மாடிகள் சூழ்ந்த அரண்மனைப் போக வாழ்வும், கோடி கோடி யெனக் குவிந்த குபேர சம்பத்தும் நிறைந்து, போகத்தின் உச்சநிலையில் புரண்டு பெருவாழ்வில் மிதந்த அவர், "காதற்ற ஊசியும் வாராது காணுங் கடைவழிக்கே" என்ற கட்டுரையைக் கண்டபோதே கொண்டார் துறவு. காவியும், முடியும் வளர்க்க அவர் காத்திருந்தாரில்லை. அடிகளார் அரிய மனத்துறவு பூண்டார். 'அற்றது பற்றெனில் உற்றது வீடு' என்னும் அருள் மொழிப்படி மெய்ஞ்ஞானம் அப்போதே அடைந்தார். அடிகளார் பூண்ட அருந்துறவு பெருந்துறவாகும். இஃது போன்ற பெருந்

துறவு யாரும் இதுகாறும் கொண்டாரில்லை. பல பிறவிகளில் மனத்துறவு பூண்டு, பரமேசுவரனைப் பலகாலம் வணங்கி ஆற்றிய பெருந் தவசிகட்குத்தான், இதுபோன்ற பெருந் துறவு பூணும் பேறு வாய்க்கும். பார்த்த யாவற்றிலும் பரமேசுவரனைக் காணும் பரிபூரண பக்குவ ஞானம் பட்டினத்தடிகளார்க்கு பண்டைத் தவப்பேற்றால் கிட்டியது. பட்டினத்தடிகளார் போன்று துறந்தார் யாருமில்லை யென்ற பெருமைக்கும் உரியவரானார் அவர்.

பிறந்தன இறப்பதும், இறந்தன பிறப்பதும், உணர்ந்தன மறப்பதும், மறப்பன உணர்வதும், பெருத்தன சிறுப்பதும், சிறுப்பன பெருப்பதும், இணைந்தன பிரிவதும், பிரிவன இணைவதும், விழைவன வெறுப்பதும், வெறுப்பன விழைவதுமான, வட்டச் சுழலில் சிக்கிச் சுழலும் இந்த உலகில்; ஐவகை இந்திரியங்கள் சதாகாலமும் கலகம் செய்யும் கானகம் போன்றதும்; அருந்தின அனைத்தும் மலமாகும் மலப் பெட்டியும்; கிருமிகள் கிண்டும் புழுக்கூடும்; அவா என்னும் கயிற்றில் ஆடும் பம்பரமும்; காமக் கனலிலும், ஈமக்கனலிலும் வேகும் கட்டையுமான; நாற்ற உடலை நானெனும் அகந்தையில் நம்பிக்கெட்டேனே! பொய்யான புவி வாழ்க்கையிற் சிக்கி பெருத்த ஏமாற்றமடைந்தேனே! எனப் பட்டினத்து அடிகளார் தில்லையம்பலத் தாடும் தேவதேவரது திருவடிகளைத் தஞ்சமெனச் சார்ந்து அகமுருகி வேண்டுகின்றார்.

திருவையாற்றில் கோயில் கொண்ட தேவதேவா! அடியேனது பல பிறவிகளில் எடுத்த எண்ணற்ற உடல்கள் எரிந்து எரிந்துகிடக்கும் இந்த மண் சூடாறவும், அதனால் ஆகாயத்தில் பரவிய புகைமண்டலம் மறையவும்; வினைப்பயனால் பத்து மாதங்கள் சுமக்க நேர்ந்த பல தாய்மார்களின் துன்பங்கள் நீங்கவும், விதியை அடிக்கடி வரையநேரும் பிரமனது கரங்களுக்கு ஓய்வு கிடைக்கவும்; பல பிறவிகளினால் ஓடி யோடிவரும் அடியேனது துன்பங்கள் தொலையவும்; தேவரீரது திருக்கண் பார்வை வழங்கி ஈடேற்றுவாயாக; எம்பெருமானே! எனக் கல்லும் கரைந்துருகும் வண்ணம் பிறவித் துன்பம் அறுக்கப் பணிவான விண்ணப்பம் சமர்ப்பிக்கின்றார் பேரன்புள்ள அடிகளார்.

பேரின்பப் பெருமானே! உமது தேவாரத் திருப்புகழ் திருமறைகளைக் கல்லாத குற்றத்தையும்; அவற்றின் உயர்ந்த கருத்துகளை உன்னியுன்னி உருகாத குற்றத்தையும்; உமது மூல மந்த்ரமான பஞ்சாட்சரத்தை ஓதி வாழ்த்தி வணங்காத அடியேனது குற்றத்தையும்; மன்னித்து. அஞ்சலென அருள் புரிவாயாக; நல்ல பெரியோர்களது அரிய கூட்டுறவும் அதனால் உண்டாகும் பக்தியும், ஞானமும் அன்றி வேறு நல்ல துணை ஒன்றையுங் காணகிலேன். கச்சியப்பனே!

ஒற்றியூர் மேவும் ஒப்புவமை யில்லா அண்ணலே! அடியேனது உடலில் அலைந்துழலும் ஐந்து கரணங்களும் அழிந்து மறையும் அந்த இறுதி நேரத்தில்; திருநீற்றை அணியவும், இரு கரங்களையும் கூப்பிய வண்ணம் சிவாய நம: என சிந்திக்கவும் செய்ய நல்ல நினைவை எளியேனுக்கு அளித்து ஆட்கொள்வாயாக என இறைஞ்சுகின்ற அடிகளாரது அன்பின் திறத்தை எண்ணும்போது அகம் மிக உருகுகின்றது.

இங்ஙனம் அடிகளார் இறைவனது எண்ணற்ற பெருமையைப் பெருக்கியும், தனது சிறுமையைக் குறித்து மனத்தை உருக்கியும், பல பண்களில் பரமேஸ்வரர் பால் பணிவுடன் பிரார்த்தித்து அடைக்கலம் புகும் முறைமையானது பெரிதும் போற்றற் குரியதாகும். மேலும் அஞ்ஞான வாழ்வை நம்பி அழியாமல், மெய்ஞ்ஞான வாழ்வைப் பெற்று, மேலான இன்பத்தை யெய்த முயலுவீர்களாக; என அவர் உலக மக்கட்கு உருக்கமான உப தேசங்களைச் செய்து உயர்ந்த மார்க்கத்தை உணர்த்தியுள்ளார்.

வெண்காட்டு வித்தகர் ஞானிக்கு விளக்கம் விளம்புகின்றதை யுன்னுவோமாக. பேய்போன்று சுற்றித் திரிவார்களாம். ஓரிடத்திற் கிடந்தால் பிணம் போன்று அமைதியாக சமாதி நிலையில் கிடப்பார்களாம். அன்பர்கள் எதை அளித்தாலும் உண்பார்களாம். பெண்கள் யாவரையும் பெற்ற தாயெனப் பார்ப்பார்களாம். உற்ற மக்கள் யாவரையும் சுற்றத்தினர் எனக் கண்டு உவப்பார்களாம். யாவரிடத்தும் இனிமையாகவும், தாழ்மையாகவும் பேசுவார்களாம். பச்சிளங் குழந்தை போன்று பேதமற்ற நிலைமையில் காட்சியளிப்பார்களாம். ஆக இவைகள் ஞானிக்குள்ள அடையாளமாகும் என அறத் துறவு அடிகளார் அறிவிக்கின்றார்.

அடிகளார் அஞ்ஞானிக்கும் பின் வரும் அடையாளம் பகர்கின்றார். எல்லாம் வல்லவரும், யாவரும் இன்புற்றிருக்க எல்லா நலங்களையும் வழங்கி இரட்சிப்பவரும், யாவும் இயங்க தில்லையில் திருக்கூத்தாடும் எந்த ஒரு மகிமை மிக்க பெருமானுண்டோ, அந்த அருட் சோதி ஆண்டவனை; முன்னை நாள் வணங்கி வழிபாடு செய்யாத மக்கள்; பின்னை நாள் இப்புவியில் உண்ண உணவும், உடுத்த உடையும் இல்லாமல், யாசகம் சென்று கேட்டாலும், கிட்டாமல் ஏங்கி இன்னல்பட்டு வருந்துவார்களாம். என்று இறைவனை வழிபடாத அஞ்ஞானிக்கு அடையாளம் அறிவிக்கும் அடிகளாரது அறிவின் திறம் போற்றிப் புகழ்தற்குரியதாகும்.

இறைவனை வணங்காதவர் கதி யிதுவாயின் அவர் இல்லவே யில்லை, என்று கூறுவோர் கதி என்னவோ! எனவே

பெருந்துறவு பூண்ட அடிகளாரது வாழ்க்கையில் அவரது உபதேசத்திலிருந்து நாம் அறியக் கிடப்பது பற்றற்ற வாழ்க்கை. அதாவது மனத் துறவு கொள்வது. இறைவன் ஒருவனைத் தவிர ஏனைய யாவும் நிலையற்றவை. ஆகவே நிலையான இறைவனிடம் அன்பு செலுத்தி வழிபட்டு நிலைபெற்ற தன்மையைப் பெறுவோமாக. எத் தொழில் செய்யினும் எந்த அவஸ்தைப் படினும் நம்முடைய மனம் மட்டும் இறைவன்பால் நிற்கவேண்டும். ஈடேற்றம் பெற நமக்கு அடிகளார் காட்டும் இணையற்ற வழி இறைவழிபாடேயாகும்.

வேலும் மயிலும் வாழ்க.

ஸௌராஷ்ட்ர நீதி சம்பு

87. சத்தியமே என் தாய், ஞானமே என் தந்தை, தருமமே என் சகோதரன், தயையே என் நண்பன், சாந்தமே என் பத்தினி பொறுமையே என் மகன். இவ்வாறுமே என் நெருங்கிய பந்துக்கள்.

88. முன் ஜென்மத்தில் செய்த புண்ணியத்திற்கு ஏற்ப, பசு, பத்னி, புத்திரன், வீடு வாசல், இவைகள் அமைகின்றன. அப் புண்ணியம் தீர்ந்ததும், மேற் சொன்னவைகள் மறைந்து போகின்றன. இவ்வாறு இருக்க, போனதற்காக வருந்துவானேன்?

89. சந்திரன் இரவில் மட்டும் தன் நிலா வொளியை பரப்புகின்றான். சூரியன் பகலில் மட்டும் பிரகாசிக்கின்றான். தருமம் மூவுலகிலும் பிரகாசிக்கும். ஆனால் ஒரு சத்புத்திரன் தன் குடும்பத்தின் ஏழு தலைமுறை பிதுரர்களுக்கும், வருங்கால ஏழு தலைமுறை வார்சுகளுக்கும் உத்தாரணம் செய்வான்.

90. திருப்தி, ஸாஹஸம், திடம், புத்தி, சாமர்த்தியம், பராக்கிரமம் இவ்வாறு அரிய குணங்கள் எவனிடம் உண்டோ, அவன் செய்யும் எல்லாக் காரியத்திலும் லக்ஷிமி வாசம் செய்வாள்.

91. விருந்தாளி, குழந்தை, மருமகன், மனைவி, ஆளும் அரசன், இவ்வைவரும், இருக்கு இல்லை என்று பாராமல் சதா காலமும் கேட்டுக் கொண்டே இருப்பார்கள்.

92. நம் சொந்த உழைப்பில் சேகரித்த செல்வம் சிறந்தது. தந்தையிடமிருந்து பெறும் பொருள் அதற்கடுத்தது. ஆனால் சகோதரன் சேகரித்த செல்வம் நல்லது அல்ல. எல்லா விதத்திலும் கெட்டது மனைவிமூலம் வந்த சொத்து.

93. உத்தமனின் சினம் ஒரே விநாடியில் தணிந்துவிடும். மத்திமனின் சினம் இரண்டு விநாடியில் தணியும். அதமனின் சினம் தணிய ஓர் பகலும் ஓர் இரவும் வேணடும். ஆனால் கடையனின் சினம் அவன் சாவுடன்தான் தணியும்.

முருகா

துணை

(வித்துவான் தி. மு. சங்கரலிங்கம், தமிழாசிரியர்,
கௌமார மடாலயம், திருவாமாத்தூர், விழுப்புரம் P.O.)

தாவிப் படரக் கொழுகொம்பிலாது தவிக்கும் பச்சிளங் கொடிக்கு ஏறிப் படர்தற்குக் கொழுகொம்பு ஒன்று தேவைப்படுதல் போல, அரிய மானிடப் பிறவி எய்திய ஆன்மாவும் நன்னிலை எய்தப் பற்றுக் கோடான துணை வேண்டும். இன்றேல் அவ்வான்மா கல்லார் கட்பட்ட திருவெனக் கருகி அழிதல் உறுதியன்றோ? அது போலவே பெண்கள் தங்கள் வாழ்க்கையில் வளமடைய தனித்திருத்தல் முடியாது; ஏன்? கூடாது என்றுங் கூறலாம். பெண்கள் கொடியை ஒத்தவர்கள். ஆகையினால் ஆண் மகன் என்ற கொம்பினைச் சார்தலே சிறப்பாகும். எனவே ஆண்மகன் தனித்து வாழினும், பெண்மகள் ஆண்மகன் ஒருவனைச் சார்ந்து வாழ்தலே சால்புடைத்தாதல் காண்க. அப்பொழுதுதான் வாழ்வு பெருகும்; வளங்கள் திகழும். இவ்வாறு இருவரும் பூவும் மணமும், தமிழும் இசையும் போல் ஒன்றுபட்டிலிருத்தலின் அன்றோ தலைவன் தலைவியரைக் குறிக்கத் துணைவன், துணைவி என்ற சொற்கள் தோன்றலாயின.

இல்வாழ்வான் என்பான் இயல்புடைய பிரம்மச்சாரி, வானப்பிரத்தன், சந்நியாசி என்ற மூவர்க்கும், கலை கண்ணால் துறக்கப்பட்டார், நல் கூர்ந்தார், தனித்து நம்பால் வந்திரந்தோர் என்ற மூவர்க்கும் நல்லாற்றி னின்று அறஞ்செய்து இல்லறம் நடத்தவேண்டும். ஆகையின் இவ்வறுவர்கட்குத் துணையாவார் இல்வாழ்வினரே என்பதை வள்ளுவர் வாய்மறை வழுத்துதல் காண்க (41, 42 குறள்). அத்தகைய வாழ்வும் வளம்பெறவேண்டுமாயின் மனையாள் இனியாளாக அமைதல் வேண்டும். என்னை? துணைவன் வருவாய் நிலையறிந்து செலவு செய்து ஓரளவு பொருளைச் சேமித்து வைத்தால் பிற்காலத்தில் பயனுறும். அஃதின்றேல் எரிமுன்னர் வைத்தூறு போல இல்லாகித் தோன்றாக்கெடும். ஆதலின் வளம்வைத்து வாழ்க்கை நடத்துதற்கு முற்கூறிய நிலையிலுள்ள துணைவிகள் தேவையாகும். இதனைத் திருவள்ளுவர்,

> "மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
> வளத்தக்காள் வாழ்க்கைத் துணை"

என்று பெண்ணின் பெருமையைப் பற்றி வாழ்க்கைத் துணை நலம் என்ற அதிகாரத்தில் வளமுறக் கூறுகிறார்.

பொருள் படைத்த ஒருவன் பசிப்பிணியால் வாடும் ஒருவனுக்கு உணவிட்டுப் புரக்காதுவிடில் அதனால் அவனுடையும் நற்பயன் உண்டுகொல்! பயன் மரம் உள்ளூர் பழுத்ததுபோல் பலரும் பயனடைய ஈந்து வாழின் அவ்வறப்பயன் மறுமைக்கும் வீயாது நிழல் அடி உறைதல் போல தொடர்ந்துவந்து காத்துத் துணைபுரியும். இதுவன்றோ நிலைத்த பொருள் என்று எண்ணும் அனைத்தும் நிலையாத காலத்துமீ அழியாத் துணையாக வரும் என்பதை,

"அன்றறிவாம் என்னாது அறஞ்செய்க; மற்றது
பொன்றுங்காற் பொன்றாத் துணை"

என்று தமிழ்மறை கூறுகிறது. இவ்வாறே உலகிற் காணும் இன்பப் பொருள்களனைத்தும் நிலையற்றது. நீரிற்காணும் குமிழி போல. ஆகையால் அரிதான மானிடப் பிறவி எய்திய ஆறறிவுடையார் நிலையாப் பொருளிடத்து வைத்த நேயத்தை மறக்க வேண்டும். பசியில்லாதவன் உணவை வெறுப்பது போல நிலைத்த பொருளிடத்து நினைவுவைத்தல் வேண்டும். பிள்ளையிடத்துத் தாய் வைக்கும் அன்பு போல பற்றற்றானைத் துணையாகப் பற்றி "நற்றுணையாவது நமச்சிவாயவே" என்று புகன்று போற்றவேண்டும்.

நம்முடைய உடம்பில் அவயவ உறுப்புகள் பல இருக்கின்றன. ஐம்பொறியின் வாயிலான துணையால் ஐம்புலன்களை ஆரத்துய்த்து மகிழ்வடைகிறோம். இரும்பைக் காந்தம் விடாதது போல. ஏன்? கண்களால் பல உளங்கவர் பொருள்களைக்கண்டு மகிழ்வடைகிறோம். அவ்வாறு கண்ணின் துணைகொண்டு கண்டபொருளைப்பற்றிப் பலபடப் பேசி காலத்தின் அருமை தெரியாமல் கடத்துகிறோம். முன் பிறப்பிற் செய்த வினை என்ன? பழி என்ன? இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ? யாது வருமோ? என்பதை ஆராயாமல் மேலும் தீவினை செய்து பழியையும், பாவத்தையும் சேர்த்துக் கொள்கிறோம். பணத்தை எண்ணி எண்ணி சேர்ப்பதுபோல. அது மட்டுமா? ஒப்பற்ற வழியில் செல்ல ஆள் துணையுடன் செல்கிறோம்; அஃது நிலையாத துணையாயிற்றே என்றெண்ணாமல். அத்துணை என்றும் துணை செய்யாமற் போய்விடும். செல்வம் செல்வது போல. ஆக இவற்றை எல்லாம் நோக்கினார் அருந்தமிழ்நாடு ஆற்றிய அறத்தின் பயனெனவந்து அவனியிற் றோன்றிய அருணகிரிநாதர். நிலையாத பொருளை நினைத்துக் கதி எனக் கிடக்கும் நம்மவர்க்கு அருளுவதைப் பாருங்கள்:—

(தொடரும்)

உ

முருகா



உறையூர்; அறுவை வாணிகர்; தருமகுணசீலர்

உயர்திரு P. V. J. முனிசாமிச் செட்டியார் அவர்கள்

நந்தன ௵ பங்குனி ௴ 25ம் நாள்

முருகவேள் திருவடி சார்ந்ததைக் குறித்துப் பாடிய

இரங்கற்பா

1 பொன்னி நதிசூழ் உறையூர்வாழ் பூபன் நீப மலர்க்குகன்றாள்
உன்னி யுருகுந் திருவாளன் உண்மை நிறைந்தோன் வண்மையருள்
மன்னி வறியார்க் கிந்துவக்கும் வள்ளல் தூய முனிசாமி
என்னும் இனியாய்! எமைப்பிரிந்தே எங்கு சென்றாய்? இயம்புதியே.

2 உறையூர் தனிலோர் மடம்புதுக்கி ஒருநாள் போலப் பலநாளும்
குறையா தநேக ஏழைகட்குக் கோதில் உணவு கொடுத்திட்டாய்
நிறைய மூல தனம்வைத்து நிலைபே றாக அமைத்தனையே
பொறையார் தரும பூபதியே! புகழுங் குகன்றாள் பொருந்தினையே.

3 வயலூர் முருகன் திருப்பணிக்கு வலத்தோள் போலே துணைசெய்தாய்
பயனோ ராது பலஅறங்கள் பரிந்து புரிந்தாய் பணிவுடையாய்!
புயலால் மெலிந்த வறியவர்க்குப் புதிய உடைகள் பலவளித்தாய்
அயனர் விதியால் முனிசாமி அன்ப! முருகன் அடிசார்ந்தாய்.

4 நாலா விதமாய்த் துதிசெய்து நதிபோல் கண்ணீர் வழிந்தோட
வேலா யுதனார் வழிபாடு விழைந்து புரிந்த வித்தகனே!
வாலா ஜாபாத் இந்துமத வளரும் பாட சாலைக்கு
மேலா தரவாய்ப் பொருளீந்தாய் விண்ணோர் விருந்தாய் மேவினையே.

5 என்பால் அன்பு செய்தாரில் எங்கும் நினக்கு இணையில்லை
உன்போல் உண்மை யுரைப்பாரை உலகில் அறியேன் உத்தமனே!
மின்போல் மறைந்தாய் இனிதுபலி விலக்குஞ் செயல்செய் முனிசாமி!
பொன்போல் நின்சீர் உன்னுதொறும் புந்தி நொந்துபுலம் புகின்றேன்.

6 அன்னை போல வறியவர்கட் கன்ன மளித்த அண்ணலே! நீ
என்னை நினைத்த வண்ணமுடன் எந்தை குகன்றாள் எய்தினையே
முன்னை விதியை வென்றவரார்? 'முருகா! முருகா!' எனஅழைக்கும்
உன்னை மறவேன் முனிசாமி! உயிருள் ளளவும் மறவேனே.

7 இனிய நினது மலர்முகத்தை எண்ணுந் தோறும் என்புருகும்
முனிவி லாத முனிசாமி! முத்தி நலத்தில் முழுகினையே
புனித குணனே! மதிநிறையற் புதனே! புகழ்சேர் புண்ணியனே!
மனித இனத்தில் மாணிக்க மணியாய் வாழ்ந்த மனோகரனே!

8 ஒருபொய் யேனும் உரையாமல் உலகில் வாணி பஞ்செய்தாய்
மருவும் அடியார் தமைப்பேணி வள்ள லாக வாழ்ந்தனையே
பொருவி லாத குணம் நிறைந்த புனித மணியே! உன்றனுயிர்
குருகு கேசன் குரைகழலில் குளிர்ந்து சாந்தி கூடுகவே.

9 மண்ணில் விளங்கும் உறையூரில் வாழ்ந்த வள்ளல் முனிசாமி!
எண்ணி லாத அறஞ்செய்த ஏந்தலே!மெய் யன்புடைய
புண்ணி யாநின் போல்வாரைப் புவியிற் காணேன் புத்தேளிர்
விண்ணி லறஞ்செய் வாயென்று விரும்பி யழைக்க மேவினையோ?

10 "திங்கட் கிழமை உச்சிதனில் சிவன் பிரியும் மணியேநீ
இங்கண் அறிவாய்" என்றுபுதன் கிழமை யன்றே இயம்பினையே
அங்கவ் விதமே சடக்கரத்தை அன்போ டுரைத்து விழிவழியே
துங்க உயிர்நீத் திறைவனடி சூழ்ந்தாய் ஆழ்ந்தாய் சுகக்கடலே.

வாழ்த்து

வாழி உறையூர் முனிசாமி மகிபன் கீர்த்தி என்றென்றும்
வாழி யன்னான் அமைத்தமடம் வாழியவன்செய் அறம்பலவும்
வாழி யவன்சேய் குருநமசி வாயன் பால சுப்ரமணி
வாழி முருகா னந்தனுமே வாழி வாழி வாழியவே.

உறையூர் அறுவை வாணிகர். அறப்பண்பாளர். உயர்திரு. P. V. J. முனிசாமி செட்டியார் என்பார், என் உயிரினும் இனிய நண்பர். இருபது ஆண்டுகளாக வளர்பிறைமதிபோல் வளர்ந்து வந்த அன்பும் நட்பும் உடையவர். வயலூர் முருகன் திருப்பணியை அடியேன் மேற்கொண்டு செய்தபோது சலிப்பின்றி உடன் இருந்து உழைத்தவர்.

பழநியாண்டவர் மடாலயத்தை உறையூரில் புதுக்கி, ஒரு லட்ச ரூபாய் மதிப்புள்ள நிலங்கள் மடாலயத்தின் பேருக்கே வாங்கி நாடோறும் 125 ஏழைகட்குக் கஞ்சியும், 51 பேருக்கு அன்னதானமும் 1925ம் ஆண்டிலிருந்து செய்து வந்தவர். நிலைபெறுக நடாத்த ஏற்பாடு செய்தவர். வயலூர், நாகை, திருவானைக்கா, திருச்சிராப்பள்ளி, உறையூர் முதலிய தலங்களில் ஆண்டுதோறும் விழா செய்யும் நியதியை யுடையவர்; வயலூரில் செய்த வைர வேலுக்குப் பெரும் பொருள் வழங்கியவர்; தனது 60 ஆண்டு நிறைவு விழாவின்போது நாகை குமாரக் கடவுளுக்குத் தங்கவேல் செய்து சாற்றியவர். புயலால் வாடிய ஏழைகட்கு ஆயிரக்கணக்கான ஆடைகள் தந்து ஆதரித்தவர். சத்திய நெறியில் நின்றவர்.

இத்தகைய உத்தமசீலர் தனது 62வது ஆண்டில் முருகனடி சார்ந்தார். மேலே கூறிய பாடல்களில் உள்ளவை யாவும் அவரிடம் உள்ள நற்குணங்களே. உயர்வு நவிற்சியன்று, அவருடைய ஆன்மா பரிபூரண சாந்தியடைவதாக.

மேலே கூறிய நற்குண சீலராகிய முனிசாமிச் செட்டியார் எனது நண்பர்களின் முதல் வரிசையில் முதலிடத்தில் நின்றவர். அவருடைய குணங்கள் பல. அவைகள் உன்னுந்தோறும் உன்னுந்தொறும் உள்ளத்தை யுருக்குபவை.

வாலாஜாபாத் இந்துமத பாடசாலையையும், அதனை நடத்தும் உயர்திரு மாசிலாமணி முதலியாரையும் அறியாதார் உலகில் ஒருவரும் இரார். அப்பாடசாலையில் ஒரு கூடம் கட்டுவித்து, ஆண்டுதொறும் பன்னிரண்டு மாணவர்களைத் தமது செலவில் கல்வி கற்பித்துவருங் கடப்பாடு கொண்டிருந்தார்.

அவர் செய்த அறங்கள் அத்தனையும் தொடர்ந்து நடந்து வரும் என்பதில் எட்டுணையும் ஐயமின்று. அவருடைய மூத்த புதல்வர் செல்வச் சிரஞ்சீவி குருநமசிவாயம் இனிய குணங்களை யுடையவர். அடக்கமும் அமைதியும் உடையவர். அவருடைய இளவல் செல்வச்சிரஞ்சீவி பாலசுப்ரமணியமும் அவ்வண்ணமே நற்குணங்களையுடையவர். தந்தையாரைப் போலவே மைந்தர்களும் நல்லறம் பல புரிந்து நானிலம் புகழ நலம் பல பெற்று நன்கு வாழ்க ஞான பண்டிதன் கருணை நாளும் நன்மையே புரிக.